மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) பாசன நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவது குறித்த பிரச்சினையைக் கருதிப் பார்க்கவும், மண்வளப்பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றவும் மத்திய பாசன-மின்சக்தி வாரியம் அமைத்த நீர்த்தேக்க வண்டல் படிமம் பற்றிய குழு, நீர்த்தேக்கங்களின் பயன்பாட்டை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு நிர்வகிப்பதற்காக, அந்தந்த மாநிலங்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கான நீர்த்தேக்க நிர்வாகக்குழுக்களை அமைக்குமாறு மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்படலாமென்று பரிவுரை செய்திருந்தது. மத்திய பாசன-மின்சக்தி வாரியம் கருத்து தெரிவித்துள்ளபடி, உணவு உற்பத்தி ஆணையாளர் தலைமையில் தமிழ்நாட்டில் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கான நீர்த்தேக்க நிர்வாகக்குழு ஒன்றை இம்மாநில அரசு அமைத்துள்ளது.

THIRU N. DENNIS: May I know whether the Board would conduct research into the water resources and also utilisation of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நீரைப் பயன்படுத்துவது பற்றியல்ல இது. வண்டல் படிவதை எப்படி அகற்றுவது என்பது பற்றியதாகும் இது. நீரைப் பயன்படுத்துவது பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

### *Structural Engineering Research Centre*

*214 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any Structural Engineering Research Centre is functioning in this State; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (a) & (b):

The Structural Engineering Research Centre is a Unit of the Central Scientific and Industrial Research of the Government of India and the Regional Office of the Structural Engineering Research Centre, Roorkee (U.P.) is functioning at Adayar,

Madras. The Regional Centre will shortly be equipped with an electoronic digital computer. It is expected to pay special attention to the following :—

(1) Development of minimum weight design for transmission line, micro-wave and television towers.

(2) Precasting–Prefabrication and systems building.

(3) Prestressed concrete sleepers.

(4) Partially prestressed concrete.

(5) Nuclear Structural Engineering.

*Traffic survey in Madras*

* 215 Q.—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any traffic survey was conducted by the Highways Research Station in Madras in January 1973; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 1973 சனவரி மாதத்தில் சென்னையில் ஒரு கணிப்பு நடத்தப்பட்டது. தெற்கு கடற்கரைச் சாலையில், அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு எதிராகப் பிரிந்து ஓஷியானிக் ஓட்டலுக்கு எதிராக மீண்டும் தெற்கு கடற்கரைச்சாலையில் சேரும் பக்கச் சாலையை பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையை கணக்கிடவும் இச்சாலையில் எத்தனை வாகனங்கள் திருப்பிவிடலாம் என்பதனை அறிவதற்காகவும் இக்கணிப்பு நடத்தப்பட்டது.

சென்னை—கோவை விரைவு இரயில்.

*216 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும் சென்னைக்கும் இடையில் துரித ரெயில் வண்டி விடுவது பற்றி மாநில அரசு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

(இ) அமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இல்லை.